JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| C.C.No. | 474/2025 | Crime No. | 246/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-6-ஜெயராமன்** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 26th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.09.2025ஆம் தேதியன்று, நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் காலை 11:30 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய தலைமை காவலர் 254 எம்.அசோக்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சுப்பிரமணி, வயது 61, த/பெ. காளியப்பன், 36/42 குறிச்சி பஸ் நிலையம், குறிச்சி அஞ்சல், பவானி தாலுகா, ஈரோடு என்பவரின் RTA இன்டிமேஷனை பெற்று பவானி அரசு மருத்துவமனைக்கு சென்று இன்டிமேஷன் மற்றும் AR Copy பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்து சுப்பிரமணி என்பவரை விசாரிக்க அவர் தனது உறவினர்களிடம் வழக்கு போடுவது சம்பந்தமாக கலந்து பேசிவிட்டு புகார் கொடுப்பதாக கூறியதால் நிலையம் வந்து மேற்படி தகவலை பொது நாட் குறிப்பேட்டில் பதிவு செய்தேன். பின்னர் 09.09. 2025 ஆம் தேதியன்று, சிகிச்சையில் இருந்த சுப்பிரமணி வழக்கு பதிவு செய்ய புகார் கொடுப்பதாக கூறியதன் பேரில் புறப்பட்டு பவானி அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சுப்பிரமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகல் 12.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண்.246/2025 சட்ட பிரிவுகள், 281 125(a) BNS ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **இன்டிமேஷன் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.26 06:04:25 +0530

பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் எழுத்து மூலமான அசல் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 பவானி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை எடுத்துக் கொண்ட நான் 09.09.2025 ஆம் தேதி 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நந்தகுமார் மற்றும் முனுசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட TN 36 AL 3604 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா டியோ ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக பவானி மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் சுப்பிரமணி, செல்வன், பன்னீர்செல்வம், ரவி, ஈஸ்வரன், பாபு, நந்தகுமார் மற்றும் முனுசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்த நிலையில் எதிரியை தேடி வந்த நிலையில் 13.09.2025-ம் தேதி 17.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலையம் ஆஜரான எதிரி தமிழன் என்பவரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து தக்க நிலையப் பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 03.11.2025-ம் தேதியன்று விபத்தில் சம்பந்தப்பட்ட TN 36 AL 3604 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா டியோ ஸ்கூட்டி வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய பவானி மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து. ஆய்வு அறிக்கை பெற்று தாக்கல் செய்தேன். **TN 36 AL 3604 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா டியோ ஸ்கூட்டி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே சுப்பிரமணி என்பவருக்கு சிகிச்சை அளித்த பவானி அரசு மருத்துவமனை மருத்துவர் சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று தாக்கல் செய்தேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் 03.11.2025-ம் தேதி, சுப்பிரமணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியும் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதாலும், இவ்வழக்கின் சட்டப்பிரிவை 281, 125(a) BNS இருந்து 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.26 06:04:35 +0530

பின்னர் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் அசோக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 03.11.2025ஆம் தேதியன்று, எதிரி தமிழன் என்பவர் மீது சட்ட பிரிவுகள் 281, 125(b) BNS கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் வழக்கிற்காக வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.26 06:04:42 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani